# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1021/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஜகுபர் அலி | த-பெ | காதர் மைதீன் |
| ஊர்: | : | பேயான்பட்டி | | |
| வயது: | : | 35/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.02.2026**

**எதிரி ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் பேயான்பட்டியில் வசித்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். 15.10.2018 அன்று இரவு 8.00 மணிக்கு நானும் சிக்கந்தர் என்பவரும் தொழில் சம்மந்தமாக அவரது வீட்டின் வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். பள்ளிவாசலின் அஜரத்தாக வேலை செய்து வந்த நபர் ஒருவர் அவருடைய குழந்தைகளை தொழுகையை முடித்துவிட்டு வீட்டில் கொண்டுபோயி விடுவதற்காக அவருக்கு சொந்தமான இருக்கர Honda Shine வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். அவர் அந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி அவருடைய குழந்தைகளை இறக்கி விட்டு பேயான்பட்டி புளியந்தோப்பு சாலை வழியாக நின்று கொண்டு இருசக்கர வாகனதில் இருந்த போது பின்னால் சம்பவ சமயத்தில் வந்த அப்பாச்சி இருசக்கர வாகனத்தில் வந்த நபர் அதிவேகமாக வந்து அவர் மீது மோதிவிட்டார், மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் சம்பவ சாலையில் கீழே விழுந்து விட்டார். மேலும் அவர் ஓட்டி வந்த அப்பாச்சி இருசக்கர வாகனத்தின் ஸ்டியரிங் அஜரத்தாக வேலை செய்து வந்த நபரின் தலை மற்றும் உடலில் சில பாகங்களில் காயங்கள் ஏற்பட்டது. இதை பார்த்த நான் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை தூக்கினேன். அதே போன்று அந்த அஜரத் நபரையும் இருசக்கர வாகனத்தில்இருந்து தூக்கினேன். அவருக்கு அதிகப்படியான இரத்த போக்கு இருந்தது. சிராஜிதீன் என்பவருக்கு தகவல் சொல்லி அவருடைய காரை எடுத்து வர சொன்னோம். அவர் வந்தவுடன் சிக்கந்தரையும், மற்றொரு நபரையும் அப்போலோ மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பின்னர் அவருடைய மகன் உமர் என்பவருக்கு இதை

பற்றி தகவல் கொடுத்தோம். மேற்படி இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்த நபர் அவருடைய சகோதரி சம்பவயிடத்திற்கு வந்து சிறுவயல் ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். பின்னர் இது தொடர்பாக இவ்வழக்கின் புகார்தாரர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்த போது மேற்படி விவரங்களை சொன்னேன். மேற்படி அதிவேகமாக சம்பவசமயத்தில் இருசக்கர வாகனத்தில் மோதிய நபர் என்னால் அடையாளம் சொல்ல முடியும்.

எதிரி இன்று ஆஜர் ஆகாததால் முதல் விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.18 15:56:26 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1021/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சிக்கந்தர் | த-பெ | சாகுல் அமீது |
| ஊர்: | : | ஆத்தங்குடி | | |
| வயது: | : | 45/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | மரக்கடை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.02.2026**

**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஆத்தங்குடியில் வசித்து மரக்கடை வைத்துள்ளேன். 15.10.2018 அன்று இரவு 8.00 மணிக்கு நானும் சகுபர் அலி என்பவரும் தொழில் சம்மந்தமாக அவரது வீட்டின் வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். பள்ளிவாசலின் அஜரத்தாக வேலை செய்து வந்த நபர் ஒருவர் அவருடைய குழந்தைகளை தொழுகையை முடித்துவிட்டு வீட்டில் கொண்டுபோயி விடுவதற்காக அவருக்கு சொந்தமான இருக்கர Honda Shine வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். அவர் அந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி அவருடைய குழந்தைகளை இறக்கி விட்டு பேயான்பட்டி புளியந்தோப்பு சாலை ஜீவாநகர் வழியாக நின்று கொண்டு இருசக்கர வாகனதில் இருந்த போது பின்னால் சம்பவ சமயத்தில் பேயான்பட்டியில் இருந்து சிறுவயல் சாலையாக வந்த அப்பாச்சி இருசக்கர வாகனத்தில் வந்த நபர் அதிவேகமாக வந்து அவர் மீது மோதிவிட்டார், மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் சம்பவ சாலையில் கீழே விழுந்து விட்டார். மேலும் அவர் ஓட்டி வந்த அப்பாச்சி இருசக்கர வாகனத்தின் ஸ்டியரிங் அஜரத்தாக வேலை செய்து வந்த நபரின் பின் தலை மற்றும் உடலில் சில பாகங்களில் காயங்கள் ஏற்பட்டது. இதை பார்த்த நான் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை தூக்கினேன். அதே போன்று அந்த அஜரத் நபரையும் இருசக்கர வாகனத்தில்இருந்து தூக்கினேன். அவருக்கு அதிகப்படியான இரத்த போக்கு இருந்தது. சிராஜிதீன் என்பவருக்கு தகவல் சொல்லி அவருடைய காரை எடுத்து வர சொன்னோம். அவர் வந்தவுடன் சிக்கந்தரையும், மற்றொரு நபரையும் அப்போலோ மருத்துவமனைக்கு அனுப்பி

வைத்தோம். சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. மேலும் விபத்து சமயத்தில் காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கும் வேலையில் இருந்ததால் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை சரியாக என்னால் பார்க்க இயலவில்லை.

**குறுக்கு விசாரணை**

**இல்லை**.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.18 15:56:33 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.